# 14C உருக்காட்டல், கலந்துரையாடல் மற்றும் ஆழமான பகுப்பாய்வு

1. பா.மொ.க ஆசிரியராக உங்களது பணியில் காணப்பட்ட அல்லது காணப்படுகின்ற (உமது தொழிலின் ஆரம்பத்தில், சிறிது காலத்தின் பின்னர், தற்பொழுது) தொடர் கல்விக்கு மிக வேண்டியனவற்றை தயவு செய்து கருத்தில் கொண்டு கலந்துரையாடுங்கள் நீங்கள் ஆர்வமாய் உள்ள உள்ளடக்கங்கள் மற்றும் கருப்பொருள்கள் யாவை? இப்பொழுதும் ஆர்வமாக இருக்கிறீர்களா?

2. தொழில்சார் தொடர்கல்வி மேம்பாட்டுக்கான வாய்ப்புக்களின் நன்மைகளை பெற்றுள்ளீர்களா? எவை, மற்றும் எவ்வகைப்பட்ட வாய்ப்புகள்? உங்கள் தொழில்சார் தோழர்களுக்கு பரிந்துரை செய்யக்கூடிய ஏதாவது வழங்கல்கள் உண்டா?

3. உங்களுக்குச்சிறப்பான ஆர்வத்தை உண்டுபண்ணும் தொடர் கல்வித் தலைப்புக்களைத் (தனியாக அல்லது இணைந்து) பட்டியலிடுக. உங்களது பிறந்த நாட்டினால் வழங்கப்படவேண்டியவற்றுக்கும் நீங்கள் தற்போது வாழ்ந்து பணி செய்யும் நாடு ஒழுங்குபண்ண வேண்டியவற்றுக்கும் இடையிலான வேறுபாட்டினை ஆராய்க. இவ்வாறான தொழில்சார் தொடர்கல்வி மேம்பாட்டுக்கான தேவைகளை எவ்வாறு நிறைவுசெய்யலாம்?

4. தொடர் கல்வியில் வழமையான வகுப்பறைக் கற்பித்தலிலிருந்து ஒரு தோழன் / தோழியுடன் ஒன்றாக இணைந்து கலந்து கொள்வதற்கான (எ.டு. உங்கள் பள்ளியினுள் ஒரு தொடர் கல்வி நிகழ்வு) சாத்தியக் கூறுகளை நீங்கள் காண்கிறீர்களா? உங்களது பங்களிப்பு என்னவாக இருக்கும். வழமையான தொடர்கல்வி வாய்ப்புகளில் சமனான நிலையில் உங்களை உட்படுத்துவதற்கு நீங்கள் என்ன செய்யலாம் (இது ஏற்கெனவே நடைபெறாவிட்டால்)?

5. பல பா.மொ.க ஆசிரியர்கள் புலம்பெயர் நாடுகள் வழங்கும் தொடர் கல்வி வாய்ப்புக்கள் பற்றி ஏதும் அறியாதவர்களாக இருக்கின்றனர் என்பதை கோல்ட்ரன், பிப்பி மற்றும் ற்ருஒங் போன்றவர்களின் (நூற்பட்டியல் தகவலைப்பார்க்க) ஆய்வு காட்டுகின்றது. உங்களது நிலைப்பாடு என்ன? தற்போதுள்ள வழங்கல்கள் என்ன மற்றும் எங்கு எவ்வாறு அவற்றுக்குப் பதிவு செய்வது என்பது பற்றித் தெரியுமா? தொழில்வாண்மை மேம்பாட்டுக்கான வாய்ப்புகள் பட்டியலிடப்பட்டுள்ள இணையத்தளங்கள் அல்லது முறையாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள அட்டவணை பற்றித் தெரியுமா? இவ்வாறான கருத்துக்களை உங்களது தோழர்களுடனும் வழமையான அரச பள்ளி ஆசிரியர்களுடனும் வேண்டிய தகவல்களை நீங்கள் பெற்றுக்கொள்ளும் வரை கலந்துரையாடவும்!

6. அத்தியாயம் 14 A.3 பா.மொ.க வின் எல்லா ஆசிரியர்களும் கட்டாயம் கலந்து கொள்ளவேண்டிய சூரிச் பள்ளி முறைக்கான அறிமுகக் கற்கை நெறியை விளக்குகின்றது. நீங்கள் பணிபுரியும் இடத்தில் இதற்கு நிகரானவை ஏதும் உண்டா, உங்கள் பட்டறிவுகள் யாவை; எங்கு / எவ்வாறு உள்ளூர் பள்ளி முறை பற்றிய அறிவை நீங்கள் பெற்றுக்கொண்டீர்கள்?

7. அத்தியாயம் 14 A.4 "தாய்மொழிக் கல்வி: இடப் பெயர்வுச் சூழலில் முதலாம் மொழியைக் கற்பிப்பது" என்னும் விரிவான மற்றும் ஈர்க்கக்கூடிய ஒஸ்ரியன் பயிற்சிக் கற்கைநெறியை விளக்குகின்றது. நீங்கள் இருக்கும் மற்றும் பணிபுரியும் இடத்தில் இவ்வாறான எதுவும் இருக்கின்றதா; நிகரான ஒரு கருத்திட்டத்தினை உருவாக்குவதற்கு ஒருவர் எவ்வாறு செயற்படவேண்டும்?

8. அத்தியாயம் 14 B யில் வெவ்வேறு நாடுகள் சார்ந்த பா.மொ.க ஆசிரியர்கள் தொடர் கல்வி வாய்ப்புக்களுடனான அவர்களது பட்டறிவுகளை விவரிக்கின்றார்கள், அத்துடன் தொழில்வாண்மைசார் மேம்பாட்டுக்கான அவர்களது தேவைப்பாடுகளும் விவரிக்கப்பட்டுள்ளன. எல்லாவற்றையும் அல்லது சில எடுத்துக்காட்டுகளைப் படித்து விவரிக்குக, மற்றும் அவற்றை உங்களது சொந்தப் பட்டறிவுகளுடன் இணைத்துப் பார்க்கவும்.